
# மனோ நினைவிதழ்



## அமரர்.
## பரராஜசிங்கம் மனோகரன்

09.01.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# பரராஜசிங்கம் மனோகரன்

அவர்கள்

மலர்வு
19.12.1964

உதிர்வு
10.12.2013

## திதி வெண்பா

"நன்மைமிகு விஜயவருட அட்டமி கார்த்திகையில்
தன்வினையை வேரறுக்கும் சிவனை - நிதம்போற்றும்
சீர்மிகு மனோகரன் பூர்வபட்ச நாற்பத்தெட்டு வயதினில்
சேர்ந்தார் அவன் தாள் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை சமாது ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும்
உவர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட
உயர் சைவ வேளாளர் குலத்திலகர்
பரராஜசிங்கம் தனலட்சுமி தம்பதியினரின்
நான்காவது அன்புப் புதல்வன்
இந்திரா அவர்களின்
பாச கணவர்

# அமரர் பரராஜசிங்கம் மனோகரன்

(முன்னாள் உரிமையாளர் றொலெக்ஸ் கிறீம் கவுஸ்)
அவர்களின்

# நினைவிதழ்

09.01.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

பாச விளக்காய் இருந்து
எமையெல்லாம் நேசமோடு அரவணைத்து
சமூக சிந்தனையும் கல்வியறிவும் தந்து
ஒற்றுமையும் உயர்வும் காட்டி
கண்ணை இமை காப்பதுபோல் காத்து
வந்தீர் பாசத்தோடும், பரிவோடும்
எமை வளர்த்து ஆளாக்கிய
அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனின் திருவடிகளை இறைஞ்சி
இம்மலரைத் தங்கள் பாதக்கமலங்களில்
நீரோடும் கண்களோடு நெஞ்சம் நிறைந்த
பாசத்தோடும் காணிக்கையாக்குகின்றோம்.

– குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பஞ்சபுராணம்



## தேவாரம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

தொண்டர்காள் தூதுசெல்லீர் பக்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறள் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்திறள் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்யாம் அல்லற்படை வாராமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கரையிலா கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு உள்ளம் குளிரஎன் கண்கள் குளிர்ந்
தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவியன் நிர்மலிவேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ மனோ ’

# நினைவஞ்சலி



உங்களின் பிரிவு அது தந்த பெருந்துயர் தீரா
தாங்கொணாத வேதனை இன்னமும் மறையவில்லை
எட்டுப்பேரோடு பிறந்நீர் செல்வச் செழிப்போடு கல்வியும் கற்றீர்.

அப்பு அம்மம்மா அரவணைப்பில் தாய் மாமன்
துணையோடு தந்தை, தாய் சகோதரங்களின் பாசப்
பிணைப்பில் வளர்ந்து ஆளானீர்.

அம்மாவை காதலித்து மணந்தீர். வியாபாரத்தில்
சிறந்தீர். மூன்று மக்களை ஈன்றெடுத்த அம்மாவுக்கு
துணையானீர் எம்மை வளர்த்து ஆளாக்கினீர்.

கல்விச் செல்வம் எமக்கு தந்திட ஓடி
ஓடி உழைத்தீர் அரும்பாடு பட்டீர்

எவருக்கும் உதவி செய்வதில் முன்
நின்றீர். எவ்வேளையென்றாலும் உமது வருத்தம்
பாராது உதவுவீர். இனிதாய் பேசுவீர்

எக் காரியத்தையும் செய்வதற்கும்
உமது வாயில் இல்லையென்ற சொல்லே
நாமறியோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா, அம்மம்மாவோடு மாமா அத்தை
மாரோடு சிநேகிதராய் பழகுவீா் மரு
மக்கள் பெறா மக்களோடு நட்புடன் இருந்
தீரே. எல்லா உறவினர்களுடனும் அன்பாகப்
பழகுவீா் மறந்தா போனீா்? எம்மை.

எந்தக் கஸ்டம் வந்தாலும் எம்மிடம்
ஏதும் கூறாமல் செயல்படுவீா். கஸ்டம்
என்பது எதுவென நாமறியோம். குடும்ப
நல வேலைகள் அனைத்தையும் தம் தலையில்
சுமந்தீர்கள். சுமை தாங்கியானீா்

எங்களுக்கு வழித்துணையாக எப்போதும்
இருப்பீர்கள் - வருவீா்களே. அப்பா

சுகயீனங்கள் வந்தபோது சகோதரங்கள் மச்சான் மார்கள் மருமக்கள் செய்த உதவிகளை எண்ணி பேசுவீா் உறவுகளின் ஒற்றுமையை பெருமையாக சொல்வதில் மகிழ்வு கொள்வீா்களே!

கூப்பிட்ட குரலுக்கு 'வருகின்றேன்' என்பது மட்
டுமே உமது வாயில் இருந்து வருமே

உமக்கு என்ன தான் வந்தது? சுகயீனத்தை
மறந்தா வாழ்ந்தீர்கள்? எமக்கு ஏதும் புரியாது
தவிக்கின்றோம்!

இந் நாளில் உமது நினைவுகளோடு நம்
வாழ்நாளில் நாம் வாழ இறைவனின் திருப்பாதத்தில்
அமர்ந்திருந்து ஆசி தருவீா்களே!
நாமும் உம்மை பிரார்த்திக்கின்றோமே.

- குடும்பத்தினா் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசு மலர்

பூமியில் பிறந்த நிமிடம் உன்
முகத்தைப் பார்த்தேன் - உன்
அருகில் இருந்த போது
உலகத்தைப் பார்த்தேன்.

பள்ளி சென்ற முதல் வருடம்
உன் அன்பைப் பார்த்தேன்
பள்ளி முடிந்த பின் உன்
கவனத்தைப் பார்த்தேன்

உன் உயிரில் கலந்த அன்பு
எனக்குத் தெரியவில்லை. இன்றோ
என் உயிரில் நீ கலந்த - அன்பு
உனக்கு புரியவில்லை.

கண்ணுக்குள் இருந்தாய் தந்தையாக
கண்ணீராக சென்றாய் பாதியாக
கண்ணுக்குள் இருந்தாய் கரு விழியாக
கண்ணோடு போனாயே இரு விழியாக.

இதயத்தில் இருந்தாய் அன்பாக
பாசத்தில் இருந்தாய் கவனமாக
உதவியாய் இருந்தாய் உறவுக்காக - ஆனால்
இவ்வுலகைப் பிரிந்தாய் பாசமலராய்

ம.மயூரி
(மகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையே !

அடுத்தவனின் கண்ணில் இன்பம்
காண்பது பாசம் தான - இனி
இவன் நெஞ்சில் இல்லை பாரம்
தனக்காக வாழ்வது தான் வாழ்க்கை

விழி ஈரம் தந்த போக்கை
இவன் பாவம் கங்கையில் தீர - என்றும்
நாளும் வணங்கும் நம் தெய்வம்
எங்கே இருக்கிறது தந்தையே!

கடலினில் கலந்திடும் துளியே கவலை எதற்கு
அலையுடன் கலந்து நீ ஆடு வாழ்க்கை உனக்கு
உணவுகள் இனி உனக்கெனுக்கு உலகம் இருக்கு
வலிகள் தாங்கிடும் புல்லில் சிலைகள் இருக்கு

கடல் தாண்டிடும் பறவைக்கெல்லாம்
இளைப்பாற மரங்கள் இல்லை ஐயா!
கலங்காமல் கண்டம் தாண்டிடுமே
உன்னால் முடிந்தால்

**ம.மயூரி**
**(மகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனை மறந்து....

எனக்குத் தெரியவில்லை
இந்த அதி காலை
எனக்கொரு செய்தி
வருமென்று!

இடியோடு மின்னலாய்
என் அறைக்குள்
காற்றோடு காற்றாய்
நீ கலந்திருப்பாயென்று!

பிடறியில் எவரோ
அறைவது போல
கண்களை யாரோ
குத்திக் கிழிப்பது
போல ரணமாய்
என்ன செய்வதென்று
புரியாத புதிராய்....

ஜன்னல் கண்ணாடிகளில்
உன் அழகு முகந்தான்
என்னுள் நானில்லை
நீயாகவே தெரிகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது கரம்
செயலிழந்து போனதோ?
கால்கள் மண்ணைத்
தொட மறுக்கின்றதே!

இதயத்துக்குள் பத்து
பேர் புகுந்து பந்தடித்து
வதைப்பது போலத்தான்
நானும் நானுமாய்.

எண்ணங்கள் என்னை
எண்ணெயில் வதக்குகின்றன
நானும் வேகுகின்றேன்
வேதனைகளை கண்ணீரால்
குளிப்பாட்டி அழுகின்றேன்
விம்மல்களை அடக்கி

கூப்பிட்ட குரலுக்கு
என்ன 'மாமா' வென்ற
கணீரென்ற உனது குரல்
என் செல் போனும்
எனைப் பார்த்து கவலையில்
பேசாதிருக்கின்றதே

மகனாய் தானே
மருமகன் உறவை
அறுத்து என்னோடு
ஒட்டி உறவாடி
தோழனாய் துணையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலனாய் ஆனாயே
நாற்பத்தெட்டு வயதினில்
அறுத்து விட்டாயே
எம் பந்தத்தை.

உனை தூக்கி
வளர்த்து ஆசையாய்
அழகு பார்த்தேன்
எனை தூககி சுமந்து
என் கடமைகளை
செய்வாயென்று தானே
காத்திருந்தேன் நீயோ
உனைக் காவ எனை
வைத்து விட்டாயே

எனக்கு நீங்கள்
செய்த உதவிகள்
போதும் நான் இனி
உங்களுக்கு எல்லா
கடமைகளையும் செய்வேனென்று
சொன்னாயே ஏமாற்றி
விட்டாயே ஏனோ?

எப் பிறப்பில் இனி
காண்பேன் என்னுயிரே
என்னாசை (மரு) மகனே
என்னாசை (மரு) மகனே

தாய் மாமன்
சுந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



**- மாணிக்கவாசக சுவாமிகள் -**

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பொய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருன்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்

ஐயா வென ஓங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்

நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்
(சிவபுராணம் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்கள் ஓய்வூதியத்தை துரிதமாக பெற தேவையான ஆவணங்கள்

அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும்போது ஓய்வூதியச்சம்பளக் கொடுப்பனவைத் துரிதப்படுத்த உத்தியோகத்தரினது சுயவிபரக் கோவையில் இருக்க வேண்டிய முக்கிய ஆவணங்கள் இல்லாமையே இக்கால தாமதத்திற்கு காரணமாக வுள்ளதென்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமது சுயவிபரக்கோவையில் இருக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக தமது கவனத்தைச் செலுத்துதல் ஓய்வூதிய நடவடிக்கையை துரிதப்படுத்தும் செயலாகும். எனவே ஒரு சுயவிபரக் கோவையிலும் இருக்க வேண்டிய ஆவணங்கள் தங்களுக்கு அறியத்தரப் படுகின்றன. தாங்கள் சுயவிபரக் கோவையில் கீழ்க் காட்டப்பட்டுள்ள ஆவணங்கள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

01. நிரந்தமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனக் கடிதம்.

02. நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை நிரூபிக்கும் கடிதம் அல்லது உடமை பொறுப்பேற்றல்.

03. தகுதிகாண் நிலைக்காலம் நீடிக்கப்பட்டிருப்பின் அதற்குரிய கடிதங்கள்,

04. மருத்துவ அறிக்கை.

05. சேவையில் நிரந்தரப்படுத்திய கடிதம் / பதவியில் உறுதிப்படுத்திய கடிதம்.

06. சத்தியப்பிரமாணம் / உறுதியுரை.

07. அமைய சேவைக்காலம் இருப்பின் அதற்குரிய கடிதங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. விதவைகள் அநாதைகள் அங்கத்துவ அட்டையின் ஒரு புகைப்படப் பிரதி

09. அரசாங்க சேவை சகாய நிதியில் பங்குகொண்ட கடிதங்கள்.

10. கோவையில் பதவியுயர்வுடன் தொடர்புடைய கடிதங்கள்.

11. சம்பள ஏற்றங்கள் அங்கீகரிக்கப்பட்ட கடிதங்கள்.

12. இடமாற்றங்களுக்கு உரிய கடிதங்கள்.

13. வினைத்திறன்காண் தடைகளில் சித்தியடைவதற்குரிய அல்லது அவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டதற்குரிய கடிதங்கள்.

14. ஊழியரின் பிறப்புச் சான்றிதழ்.

15. விவாகச் சான்றிதழ்.

16. பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்.

17. வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பிறப்புகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்கப்பட்ட கடிதங்கள்.

18. விவாகரத்து செய்யப்பட்டிருப்பின் அவ்வழக்குத் தீர்ப்பின் ஒரு பகுதி.

19. மீண்டும் விவாகமாகியிருப்பின் விவாகச்சான்றிதழ்.

20. வாழ்க்கைத் துணைவர் அல்லது பிள்ளைகள் மரணித்திருப்பின் அவர்களின் மரணச் சான்றிதழ்.

21. வலது குறைந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் வலது குறைவை நிரூபிக்கின்ற மருத்துவச் சான்றிதழ்களும் உரிய மற்ற சான்றிதழ்களும்.

22. வாழ்க்கைத் துணைவர் தொழில்புரிபவராயின் அது பற்றிய விபரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி அல்லது சாரதி உத்தரவுப் பத்திரம் இருப்பின் அதன் புகைப்படப் பிரதி ஒன்று.

24. கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்.

25. தொழில்சார் தகைமைகள் பெற்றிருப்பின் அச்சான்றிதழ்களின் பிரதிகள்.

26. உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சியின்போது பெறப்பட்ட சான்றிதழ்கள்.

27. அரைச்சம்பள விடுமுறைகள் மற்றும் சம்பள மற்ற விடுமுறைகள் பற்றிய விபரங்ளகள்.

28. பிரசவ விடுமுறைகள் பற்றிய விபரங்கள்.

29. திடீர் விபத்துக்கான விடுமுறை பற்றிய விபரங்கள்.

30. வெளிநாட்டு விடுமுறை பற்றிய விபரங்கள்.

31. முற்பட்ட ஆண்டுகளில் விடுமுறைகள் பெற்றிருப்பின் உரிய விபரங்கள்.

32. கற்கை விடுமுறைகள் பெறப்பட்டிருப்பின் உரிய விபரங்கள்.

33. வருடாந்த விடுமுறை அறிக்கைகள் (பெற்றுக் கொள்ளப்படாத விடுமுறைகளுக்காக ஓய்வு பெறும் தறுவாயில் கொடுப்பனவுகள் செய்யப்படுவதால்)

34. பதவி வெறி தாக்கல் கட்டளையும் திரும்பச் சேவையில் அமர்த்தும் கட்டளைகளும்.

35. ஒழுக்காற்று கட்டளைகளும் அக்கட்டளை நடைமுறைப்படுத்திய கடிதங்களும்.

36. ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்காக சமர்ப்பித்த மேன்முறையீடு பற்றிய தீர்மானங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. இரண்டாம் நிலை அடிப்படையில் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட கடிதங்கள் (இருக்குமாயின்)

38. இரண்டாம் நிலை அடிப்படையில் இந்தக் காலத்தில் அந் நிறுவனத்தால் ஓய்வுச் சம்பளத்திற்காக சம்பளத்திலிருந்து 25 வீதம் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டவை நிரூபிக்கும் கடிதங்கள்.

39. மாகாண சேவைக்கு விடுவித்தல் பற்றிய கடிதங்கள்.

40. மாகாணசேவையிலிருந்த அரசசேவைக்கு உள்ளீர்க்கப் பட்ட கடிதங்கள்.

41. சேவை பாராட்டப்பட்ட கடிதங்களும் குற்றம் குறை தெரிவித்த கடிதங்களும்.

42. கடன்பெறப்பட்டதற்கான கடிதங்கள்.

43. நாளதுவரைபடுத்தி விதிமுறையாக பேணிவருகின்ற வரலாற்றுத்தாள்.

44. அரச விடுதியில் வசிப்பதாக இருந்தால் வீட்டு வாடகை, மின்சாரம், தொலைபேசிக் கட்டணங்கள் செலுத்தப் பட்டுள்ளதற்கான அறிக்கைகள்.

45. பெயர் மாற்றக்கடிதம் (கடமையின்போது திருமணமாகிய பெண் உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

46. உடன்படிக்கை படிவம்.

47. சொத்து பிரகடனம்.

48. கணவர் மனைவியின் / பிறப்புச் சான்றிதழ்.

49. உரிய வேறு ஆவணங்கள்.

இந்த ஆவணங்களில் தங்களுக்குப்பொருத்தமான ஆவணங்கள் இதுவரையில் சமர்ப்பிக்கப்படாதிருப்பின் அவற்றைத் தங்களுக்குரிய திணைக்களங்களில் விரைவில் கையளிக்கப்படல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதிய திகதிவரை காத்திருக்காது ஒவ்வொரு நடவடிக்கையின்போதும் தேவையான ஆவணங்களை கையளித்தல் அவசியமானதாகும்

# திருமணச் சான்றுப் பத்திரம்

## 1. திருமணச் சான்றுப் பத்திரம் என்றால் என்ன?

இலங்கையில் நிலவும் சட்டங்களின் பிரகாரம் ஜோடியொன்றைச் சட்டபூர்வமாக திருமணமாகி பதிவுசெய்யப்பட்டுள்ளனர் என்பதை நிரூபிக்கும் ஆவணமே திருமண சான்றுப் பத்திரம் ஆகும். இலங்கையில் திருமணப் பதிவொன்று பின்தரப்பட்டுள்ள சட்டதிட்டங்களின் ஒன்றின்கீழ் பதிவுசெய்யலாம்.

- திருமணப் பதிவுப் பொதுக் கட்டளைச் சட்டம்
- முஸ்லிம் திருமண / விவாகரத்துச் சட்டம்
- கண்டிய திருமண / விவாகரத்துச் சட்டம்

## 2. திருமணச் சான்றுப் பத்திரம் ஏன் அவசியமாகும்?

- திருமணம் செல்லுபடியானது என்பதை நிரூபிப்பதற்கு
- பிள்ளைகளின் சட்டபூர்வ தன்மையை உறுதிப்படுத்துவதற்கு
- கணவருக்கும் மனைவிக்கும் இடையிலான திருமணத்தை சட்டபூர்வமாக்குவதற்கும், பிள்ளையின் பிறப்புச்சான்றுப் பத்திரத்தில் தந்தையின் விபரங்களை உள்ளடக்குவதற்கு
- சொத்துக்களை உறுதிப்படுத்துவதற்கு
- ஊழியர் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஓய்வூதிய ஆகியவற்றின் நன்மையைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு
- திருமண அனுகூலங்களைப் பெறுவதற்கு

## 3. திருமணமொன்றை ஒருவர் எவ்வாறு பதிவு செய்வது?

திருமணமொன்றைப் பதிவுசெய்வதற்கும், திருமணச் சான்றுப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கும் நடைமுறை வித்தியாசங்கள் காணப்படும். திருமண வைபவத்திற்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண பதிவாளரை சந்தித்து திருமணம் தொடர்பான அறிவித்தலை வழங்கவேண்டும். இவ் அறிவித்தலை திருமணம்

நடைபெறும் திருமண திகதியிலிருந்து 14 நாட்களுக்கு முன்னர் வழங்க வேண்டும். இவ் அறிவித்தலை 14 நாட்களுக்குள் வழங்காவிட்டால் திருமணப் பதிவு செய்யும் முகமாக விசேட உத்தரவுப் பத்திரமொன்றுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

- **சமய நிறுவனமொன்றின் திருமணம்**
  சமய நிறுவனமொன்றில் திருமணம் இடம்பெற்றால் உங்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமய நிறுவனம் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பி வைக்கும். பிரதேச செயலகத்தில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இத்திருமணம் பதிவுசெய்யப்பட்டு பிரதி ஒன்று சம்பந்தப்பட்ட தம்பதியினருக்கு அனுப்பி வைக்கப்படும்.

- **சமய நிறுவனமொன்றில் இடம்பெறாத திருமணம்**
  சமய நிறுவனமொன்றுக்கு வெளியே திருமணம் இடம் பெற்றால் திருமண பதிவை செய்வதற்காக உள்ளூர் விவாகப் பதிவாளரை திருமணத் தம்பதியினர் நாடவேண்டும்.

**திருமணப் பதிவு செய்தல்**

திருமணப் பதிவிற்கு ஆணும் பெண்ணும் 18 வயதிற்குமேல் இருத்தல் வேண்டும். பதிவு செய்வதற்கு அறிவித்தல் படிவத்துடன் தம்பதியினரின் பிறப்புச் சான்றிதழும் அடையாள அட்டையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் விவாகப் பதிவு செய்வதற்கு பின்வரும் விபரங்கள் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

1. தம்பதியினரது முழுப்பெயர், வயது, வதிவிட முகவரி, தொழில்
2. தந்தையின் முழுப்பெயரும், தொழிலும்
3. இரண்டு சாட்சிகளின் பெயர், விலசமும் கையொப்பமும்

**மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவதற்கு அல்லது பதிவாளர் அலுவலகத்தில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பதிவாளரிடம் 14 நாட்களுக்கு முன்னர் அறிவிக்க வேண்டும்
2. B100 படிவம் நிரப்பப்பட வேண்டும்
3. பதிவாளர் அலுவலகத்தில் விவாகம் நிறைவேற்ற 750/= பணமாக செலுத்தப்பட வேண்டும்
4. அறிவித்தலுக்கு ரூபா 100/= பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

திருமணப் பதிவுப் படிவங்கள் யாவும் பதிவாளரிடம், மாவட்ட பதிவகத்தில் பிரதேச செயலகத்தில் இலவசமாகப் பெறலாம்.

**விவாகப் பதிவாளர் அலுவலகம் அல்லாத வேறு இடங்களில் பெறுவதற்கு திருமண பதிவிற்கு ரூபா 5000 காசாக செலுத்த வேண்டும்**

**திருமணச் சான்றிதழினை திருத்தம் செய்தல் திருத்தம் செய்ய அனுமதி பெற வேண்டிய இடங்கள்**

- பொது விவாகம் மாவட்ட நீதி மன்றம்
- கண்டிய விவாகம் பதிவாளர் நாயகம்
- முஸ்லிம் விவாகம் பதிவாளர் நாயகம்

4. திருமணச் சான்றுப் பத்திரத்தின் மேலதிக பிரதியொன்றை அல்லது திருமண சான்றுப் பத்திரம் தொலைந்தால் இன்னொன்றை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்?

திருமணப் பதிவுப் பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு/பிரதேச செயலருக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும். பின்வரும் தகவல்கள் சரிவர வழங்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமாகும்.

- இரு தரப்புகளினதும் முழுப் பெயர்கள்
- திருமணத் திகதி/தெரியாவிட்டால் மாதம், வருடம் அவசியம் என்பதுடன் மாதம் கூடத் தெரியாவிட்டால் ஆகக் குறைந்தது திருமணப் பதிவு செய்யப்பட்ட வருடமாவது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பதிவாளரின் பெயரும், திருமணம் செய்யப்பட்ட பதிவு அலுவலகத்தின் விலாசத்தையும் வீடொன்றில் நடந்திருந்தால் அவ்விடத்தின் விலாசத்தையும், அது சார்ந்துள்ள மாவட்டத்தையும் வழங்குவது உதவியாக விருக்கும். ஆனால் அவசியமானதல்ல.

இச்சகல விபரங்களையும் கொண்டிருக்காவிட்டால் திருமணம் இடம்பெற்ற பிரிவின் பெயரை நீங்கள் அறிந்திருந்தால் தேடல் ஒன்று நடத்தப்பட முடியும்.

திருமணச் சான்றுப்பத்திரத்தின் திகதியும், இலக்கமும் தெரிந்திருந்து, இன்னொரு திருமணச் சான்றுப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும்போது ஆகக் குறைந்த கொடுப்பனவு ஒன்றுடன் பிரதி ஒன்றைப் பெறமுடியும்.

- தேடுதல் தேவைப்படாத பட்சத்தில் (பதிவு திகதியும் இலக்கமும் தெரிந்திருந்தால் ) ரூபா 100
- தேடுதல் தேவைப்படும் பட்சத்தில் ரூபா 200

## மரணச் சான்றுப் பத்திரம்

1. **மரணச் சான்றுப்பத்திரம் ஏன் எமக்கு அவசியம்?**

- நபர் ஒருவர் மரணமாகிவிட்டார் என்பதை நிரூபிப்பதற்கு
- ஆயுள் காப்புறுதிக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு
- சார்ந்திருப்பவர்களுக்கு மரண அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- சார்ந்திருப்பவர்களுக்கு ஊழியர்சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஓய்வூதியம் ஆகியவற்றின் நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கு
- மரணமானவர்களுக்குச் சொந்தமான சொத்து தொடர்பில்சாசன வழக்குகளுக்காக நீதிமன்றத்துக்கு அனுப்பி வைப்பதற்கு
- வயதையும் திகதியையும் இடத்தையும் மரணத்துக்கான காரணங் களையும் நிரூபிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசாங்கத்தினால் சனத்தொகை மதிப்பீடு மற்றும் வேறு சமூக நன்மைகள் ஆகியவற்றை சீராக்குவதற்கு
- பொது மயானத்தில்/மாநகர பகுதியில் அடக்கம் செய்வதற்கு

## 2. மரணமொன்றை எவ்வாறு பதிவு செய்வது?

பிறப்பு, இறப்பு பதிவுச்சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் மரணமொன்றை நாம் பதிவு செய்வது அவசியமானது ஆகும். இது மூன்று வழிகளில் செயற்பட முடியும். மரணம் இடம்பெற்ற இடத்தின் மீது இது தங்கியுள்ளது.

- **வீடொன்றில் மரணம்**

இங்கு மரண நேரத்தில் சமூகம் அளித்திருந்த தகவல் அளிப்பவர்கள் மிக நெருங்கிய உறவினர் மரணத்தைப் பற்றி 5 நாட்களில் கிராம உத்தியோத்தர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்க வேண்டும் என்பதுடன் 90 நாட்களில் உள்ளூர் பதிவாளருக்கு அறிவிக்க வேண்டும் பகுதியில் உள்ள சகல மரணங்களையும் மரணம் இடம்பெற்று 5 நாட்களில் மாவட்ட பதிவாளருக்கு கிராம உத்தியோகத்தர் அறிவிக்க வேண்டும்.

- **வைத்தியசாலையில் மரணம்**

வைத்தியசாலையில் பொறுப்பில் உள்ள வைத்தியரினால் வழங்கப்பட்ட அறிக்கையுடன் உள்ளூர் பதிவாளர் மரணத்தைப் பதிவு செய்வார்.

- **தோட்டங்களில் மரணம்**

இத்தருணங்களில் தோட்டமுகாமையாளரினால் செய்யப்பட்ட அறிக்கை யொன்றின் அடிப்படையில் மரணம் பதிவு செய்யப்பட்டு மாவட்டமருத்துவ உத்தியோகத்தரின் மூலம் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மரணச்சான்றுப் பத்திரத்தின் பிரதியொன்றை கட்டணமின்றி பெற்றுக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3.உள்ளூர் பதிவாளருடன் 90 நாட்களின் பின்னர் மரண மொன்றை நீங்கள் எவ்வாறு பதிவு செய்வது ?**

மரணம் இடம்பெற்ற பகுதியில் பிரதேச செயலக அலுவலகத்தில் பதிவு ஒன்று செய்யப்படவேண்டும். இடம்பெற்ற மரணத்தை நிருபிக்கும் வைத்தியசாலையின் அறிக்கை அல்லது கிராம உத்தியோகத்தரின் அறிக்கை போன்ற ஆதரவளிக்கும் ஆவணங்கள் வழங்கப்படும் கட்டணமாக ரூபா 50 பணமாக கொடுக்கப்பட வேண்டும்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மரணப் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் பிரதேச செயலாளரினால் அல்லது உதவி பதிவாளர் நாயகத்தினால் விசாரணையொன்று நடத்தப்படும்.

**பிந்திய பதிவுக்கான கட்டணம்**

ஒரு வருடத்திற்கு குறைவான காலத்திற்கு முன்னர் மரணம் இடம்பெற்றிருந்தால் சான்றுப் பத்திரத்தின் பிரதியொன்று உட்பட பிரகடனத்திற்கான முத்திரை தீர்வை ரூபா 1 ஆகும். ஒரு வருடத்துக்கு மேலான காலத்திற்கு முன்னர் மரணம் இடம்பெற்றிருந்தால் சான்றுப் பத்திரத்தின் பிரதியொன்று உட்பட பிரகடனத்திற்கான முத்திரை தீர்வை ரூபா 5 ஆகும். இன்னும் தேடுதலுக்கான கட்டணதாக ரூபா 200உம் பணமாக செலுத்தப்பட வேண்டும்.

4. **மூன்று மாதங்களின் பின் ஒரு வருடத்திற்குட்பட்ட அல்லது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் நடந்த இறப்பைப் பதிவு செய்தல்.**

1. காலம் தாழ்த்திய மரணம் பதிவு செய்யும் படிவம் (B –15)
2. தேடுதல் விளைவு அறிக்கை
3. வைத்தியசாலை அறிக்கை
4. கிராம அலுவலரின் அறிக்கை
5. மரண அறிவித்தல் துண்டுப் பிரதி
6. மரணச் சடங்கு செலவுடன் தொடர்புடைய பற்றுச்சீட்டு
7. மலர்ச்சாலை பற்றுச்சீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மதகுருவின் அறிக்கை
9. நலன்புரிச் சங்கங்களின் கடிதம்
10. மயான அறிக்கை அல்லது மயான பற்றுச்சீட்டு அல்லது மரணச் சடங்கில் பங்குபற்றிய இரு சாட்சிகளின் வாக்குமூலம் அல்லது கடிதம்
11. திடீர் மரணமாயின் (தற்கொலை, விபத்து) திடீர் மரண வைத்திய அதிகாரியின் அறிக்கை

மூலப்பிரதியும் உறுதிப்படுத்தப்பட்ட இணைப்பிரதியும் இணைக்கப்பட வேண்டும். உரிய படிவத்தை பிரதேச செயலகத்தில்/மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து மேற்குறித்த ஆவணங்களை இணைத்து தங்கள் பிரதேச செயலகத்தில்/மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ் ஆவணங்கள் உதவிப் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்ட பின் பதிவு செய்யப்படும்.

**5. இந்திய இறப்புச் சான்றிதழை இலங்கை இறப்புச் சான்றிதழாக மாற்றுதல்**

1. நாடு கடந்த இறப்பை பதிவு செய்வதற்கு பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட படிவம் (36ம் பிரிவு)
2. இந்தியாவில் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியும் இணைப் பிரதியும்
3. இந்தியாவில் வாழ்ந்தமைக்கான அகதி அடையாள அட்டையின் இணைப்பிரதி
4. கிராம அலுவலரின் அறிக்கை
5. இறந்தவருக்கும் பிரதிக்கிணையாளருக்கும் உள்ள உறவு முறையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

உரிய படிவத்தை பிரதேச செயலகத்தில்/மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பெற்று, பூர்த்தி செய்து தந்தை/ தாய்/ கணவன்/ மனைவி/ பிள்ளைகள் கையொப்பமிட்டு சமாதான நீதவான் உறுதிப்படுத்தலின் பின்பு மேற்குறித்த ஆவணங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்து தங்கள் பகுதி பிரதேச செயலகத்தில்/மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அவை இந்திய தூதுவராலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு ஒரு பிரதி இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

**துணைத் தூதுவராலயம் இலங்கை**

இல:196 டி.டி.கே. வீதி (T.T.K Road ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018

தொலைபேசி: 0091 44 24987896 0091 44 24987612

தொலைநகல்: 0091 44 24987878 0091 44 24987894

**6. காணாமல் போய் ஒரு வருடத்திற்குப் பின்பு இறப்புச் சான்றிதலுக்காக விண்ணப்பித்தல்**

1. காணாமல் போனவுடன் SLRC அல்லது மனித உரிமை ஆணைக்குழு அல்லது பொலிசிலோ புகார் கொடுக்க வேண்டும்.
2. புகார் கொடுத்த ஆவனத்துடன் நெருங்கிய உறவினர் பிரதேச செயலகத்தில் காணாமல் போனவருக்குரிய படிவத்தை பூர்த்திசெய்து கிராம சேவையாளரிடம் உறுதிப்படுத்தி அந்த பகுதி பிரதேச செயலகத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

**தேவைப்படும் ஆவணங்கள்**

அ) புகார் அறிக்கை

ஆ) நிரப்பப்பட்டு கிராமசேவகரிடம் உறுதிப்படுத்தப்பட்ட படிவம்

இ) உரியவரின் பிறப்புச் சான்றிதழ் அல்லது தேசிய அடையாளஅட்டை

ஈ) நெருங்கிய உறவினர் அல்லது கணவர்/மனைவி என்றால் திருமணச் சான்றிதழ், குடும்ப அட்டை தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப் படவேண்டும்.

பிரதேச செயலகம் விசாரித்த பின்பு உரிய நபர் காணவில்லை என பலகையில் இரண்டு வாரங்கள் போடப்பட்டிருக்கும். அவர் தொடர்பாக எந்த தகவலும் யாரும் கூறவில்லை என்ற பட்சத்தில் சகல படிவங்களும் ஆவணங்களும் பிரதேச செயலாளரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபாரிசுடன் உதவிப் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்ட பின் இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

**7.மரணச்சான்றுப் பத்திரத்தின் மேலதிக பிரதியொன்றை அல்லது மரணச் சான்றுப் பத்திரத்திரம் தொலைந்தால் மேலதி பிரதியை நீங்கள் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்?**

இதற்கு மரணம் இடம்பெற்ற சம்பந்தப்பட்ட பகுதியின் பிரதேச செயலருக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும். பின்வரும் தகவல்கள் நீங்கள் சரிவர அனுப்பி வைக்க வேண்டும்.

- மரணமானவரின் முழுப்பெயர்
- மரணத் திகதி, இடம் வீட்டில் மரணம் இடம்பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட விலாசம் அல்லது வைத்தியசாலையில் இடம்பெற்றிருந்தால் வைத்தியசாலை அமைந்துள்ளபட்டினம்.
- மரணமானவரின் பெற்றோர்களின் முழுப்பெயர்
- மரணம் இடம்பெற்ற திகதி தெரியாவிட்டால் அது இடம்பெற்ற மாதமும், வருடமும் வழங்கப்படுவதுடன் மாதம் கூட தெரியா விட்டால் வருடம் வழங்கப்படவேண்டும். மரணச்சான்றுப் பத்திரத்தின் மேலதிக பிரதியொன்று வழங்கப்படும்போது பதிவு அலுவலகத்தினால் கோரப்பட்ட வாறு ஆவணப்படுத்தலுக்கு விண்ணப்பதாரிக்குத் தெரிந்தவகையில் தீர்வு காணப்படும்.

**8. மரணச் சான்றிதழ் பிரதியேக பிரதியொன்றை பெறுவதற்காக முத்திரை தீர்வை பின்வருமாறு அறவிடப்படும்.**

- தேடுதல் தேவையற்ற சந்தர்ப்பத்தில் பதிவு இலக்கமும், திகதியும் அறிந்திருந்தால் ரூபாய் 100
- தேடுதல் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் ரூபாய் 200

விண்ணப்பப் பத்திரம் கிடைத்ததின் பின்பு மாவட்டப் பதிவாளரினால் கீழ்க்காணப்படும் செயல்முறைகள் பின்பற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. விண்ணப்பப் பத்திரத்தின் ஒரு பிரதியைத் தனது அலுவலகத்திலும் சம்பந்தப்பட்ட கிராம அலுவலரின் அலுவலகத்திலும் இரண்டு வாரங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குக் காட்சிப்படுத்தப்படும்.

2. காட்சிக்கு வைக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு மாதப் பகுதியினுள் அந்த விண்ணப்பப் பத்திரம் தொடர்பான எதிர்ப்புக்கள் (இருந்தால்) அவற்றைப் பெற்றுக்கொள்ளல்.

3. ஒரு மாத காலப்பகுதியின் பின்பு எதிர்ப்புக்கள் இருந்தால் அதுபற்றி விசாரணையை மேற்கொள்ளுதல்.

4. விசாரணையின்பின்பு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் உண்மைத் தன்மை பற்றி திருப்திப்படுவாரானால் அது பற்றிய அறிக்கையை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவு அமைந்துள்ள வலயத்திற்கு பொறுப்பான உதவிப்பதிவாளர் நாயகத்திற்கு அனுப்புதல்

5. பதிவாளர் நாயகத்தின் கட்டளை கிடைத்ததின் பின்பு சம்பந்தப்பட்ட பிரிவின் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளரினால் இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

மாவட்டப் பதிவாளரினால் நடாத்தப்படும் விசாரணை பற்றித் திருப்தியடையாத தரப்பினருக்கு அதைப்பற்றி ஒரு மாத காலப்பகுதிக்குள் பதிவாளர் நாயகத்திற்கு மேல் முறையீடு ஒன்றைச் சமர்ப்பிக்கமுடியும்.

**9.சட்டத்தின் ஏற்பாடுகளை முறையற்ற விதத்தில் பாவிப்பதற்கு நியமிக்கப்பட்ட தண்டனைகள்** முன்பு குறிப்பிட்டதன் பிரகாரம் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு முக்கிய நோக்கமாக இருந்தது யாதெனில் கிட்டத்தட்ட முப்பது வருடங்களுள் இந்த நாட்டில் நடைபெற்ற சிவில் யுத்தத்தினால் நேரடியாக பாதிப்புக்குள்ளான பொது மக்களுக்கு நிவாரணம் அளிப்ப தேயாகும். அதன் பிரகாரம் இறப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுசெய்வதற்கு பொது வான சட்டத்தின் கீழ் உள்ள ஏற்பாடுகள் இந்தச் சட்டத்தின் மூலம் தளர்த்தப்பட்டுள்ளது.

ஆனால் யாராவதொரு நபர் இதனைப் பயன்படுத்திக்கொண்டு நேர்மை யற்ற விதத்தில் இறப்பைப் பதிவு செய்வதைத் தவிர்ப்பதற்கு தேவை யான ஏற்பாடுகளும் சட்டத்தில் வெளிப்படையாகவே காட்டப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் கீழ்க்குறிப்பிட்ட குற்றத்தைப் புரியும் எந்தவொரு நபரையும் மேல்நீதிமன்றத்தின் முன்பாக நடைபெறும் வழக்கு விசாரணையின் பின்பு ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தற்கு சிறைத் தண்டனை வழங்கப்படும்.

- இந்தச் சட்டத்தின்கீழ் தன்னால் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் தெரிந்து கொண்டே உண்மையற்ற விடயங்களை வெளிப்படுத்துதல் அல்லது பொய்யான தகவல்களை வழங்குதல்.

- இறப்பைப் பதிவுசெய்வதற்குரிய யாராவதொருவர் உயிருடன் இருக்கி றாரென்று தெரிந்து கொண்டு, அந்த தகவலை பதிவாளர் நாயகத்திற்கு வழங்குதலை தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

- பிறப்பு மற்றும் இறப்பைப் பதிவு செய்யும் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ் அந்தச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர் உயிருடன் இருக்கிறார் என்பதை தெரிந்து கொண்டு அல்லது அதுபற்றி நம்புவதற்குக் காரணங்கள் இருக்கும் பொழுது ஏமாற்றும் எண்ணத்துடன் நேர்மையற்ற முறையில் பாவித்தல்.

குறிப்பு

யுத்த காலங்களில் காணாமல் போனவர்களை இறந்தவர்களாக பதிவு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010ம் ஆண்டில் 10ம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்தச் சட்டம் 3 வருடங்களுக்கு மாத்திரம் நடைமுறையில் இருப்பதனால் சட்டத்தின் கீழ் இறப்பைப் பதிவுசெய்வதற்கான சகல விண்ணப்பங்களும் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகளுக்கு இலங்கை பிரஜாவுரிமை சான்றிதழைப் பெறுதல்**

1. பிரஜா உரிமை என்றால் என்ன?

நீங்கள் இலங்கையில் பிறந்திருந்தால் பிரஜா உரிமை பற்றிய பிரச்சினை இல்லை. ஆனால் நீங்கள் இலங்கைக்கு வெளியே பிறந்திருந்தால் பிரஜா உரிமை பற்றி கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பதிவுசெய்ய வேண்டும். இந்தியாவில் பிறந்திருந்தால் இந்தியாவில் பதிவு செய்வதற்குரிய வசதிகள் இந்தியாவில் இலங்கை பிரதி தூதுவராலயத்தில் உண்டு. பதிவால் பெறும் பிரஜா உரிமை ஆவணத்தை குறிக்கும்.

**பிரஜாவுரிமைப் பத்திரத்தைப் பெற விண்ணப்பம் செய்யும் படிமுறைகள்**

**படிமுறை - 1**

பெற்றோர்கள் பிரஜாவுரிமைப் பத்திரத்தின் வெளிப்படுத்துகைப் பத்திரத்தை பூர்த்தி செய்து சமாதான நிதவான் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர் முன்னிலையில் ஒப்பமிட வேண்டும்.

**படிமுறை - 2**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழ்வரும் ஆவணங்களின் மூலம் பிரதியையும், நிழற்பிரதியையும் இணைக்க வேண்டும்.

பிரஜாவுரிமை சான்றிதழ் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான ஆவணங்கள்

1. பிள்ளையின் இலங்கை பிறப்புச் சான்றிதழ் (Consular BC)
2. பிள்ளையின் அப்பாவின் பிறப்புச் சான்றிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிள்ளையின் அம்மாவின் பிறப்புச் சான்றிதழ்
4. பெற்றோரின் விவாகச் சான்றிதழ்
5. பிள்ளையின் இந்தியப் பிறப்புச் சான்றிதழ்
6. இந்தியாவில் இருந்ததை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
7. இந்திய அகதி அடையாள அட்டை
8. UNHCR அட்டை
9. இந்தியாவில் இருந்து இலங்கை வந்ததை உறுதிப்படுத்தும் கிராம சேவகரின் கடிதம்
10. இந்தியாவில் இருந்து இலங்கை வந்த பிரயாண ஆவணங்கள்
11. இலங்கை குடும்ப அட்டை (Photocoy)

தங்கள் ஆவணங்களின் இணைப்பிரதிகள் யாவும் தங்கள் பகுதி பிரதேச செயலகத்தினால் உண்மைப்பிரதி என உறுதிப்படுத்தப்பட வேண்டும்

துரிதமாகத் தேவைப்படுத்துமிடத்து விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் 41, ஆனந்த ராஜகருணா மாவத்தை புஞ்சிபொரளை, கொழும்பு
தொபேசி. 011-5329000

## தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ளுதல்

**தேசிய அடையாள அட்டையைப் பெறும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகள்:**

தேசிய அடையாள அட்டையைப் பெற இருக்கின்ற அனைத்து விண்ணப்பதாரிகளும் உரிய விண்ணப்பத்தையும் தேவையான அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ள கீழ்வரும் உத்தியோகத்தரில் ஒருவரிடம் செல்ல வேண்டும்.

1. விண்ணப்பதாரி தான் நிரந்தரமாய் வதியும் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளரை
2. பெருந்தோட்டத்தில் வசிப்போர் தமது தோட்ட அதிகாரியினை
3. பாடசாலை விண்ணப்பதாரியின் தமது பாடசாலை அதிபரை.

இதற்கமைய தான் பெற்றுக்கொண்ட விண்ணப்பத்தை பூரணமாக்கி, தேவையான ஆவணங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்து மேற்காட்டிய உத்தியோகத்தரிடம் கையளிக்கவும். இச் சந்தர்ப்பத்தில் தான் பெற எதிர்பார்க்கும் அடையாள அட்டைக்குரிய விண்ணப்ப படிவத்தை பாவிக்க வேண்டும்.

1. முதல் தடவை தேசிய அட்டைக்கு விண்ணப்பித்தல் (விண்ணப்பப்படிவம் இல . 01)
2. சேதமடைந்த அல்லது அடையாள அட்டை திருத்தம் மேற்கொள்ளத் தேவையாயின் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல் (விண்ணப்பப்படிவம் இல.08)
3. சரியான காரணத்திற்கமைய இணைப்பிரதி தேசியஅடையாள அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பித்தல் (விண்ணப்பப் படிவம் இல - 07)

**01. முதல் தடவை தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளல்**

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்

(ஆ) 16 வயது பூரணமாக இருத்தல் வேண்டும்

முதல் தடவை அடையாள அட்டை பெறுவதற்காக ஆப.தி01 விண்ணப்பப் படிவத்தை (வெள்ளை நிறம் அல்லது வெள்ளை நிறத்தை ஒத்தது)யும் கீழ்வரும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

1.1. விண்ணப்பதாரி 50 வயதுக்கு குறைந்தவராயின் கட்டாயமாக பிறப்பத்தாட்சிப் பத்திரத்தையோ அல்லது மேலதிக மாவட்டப் பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட உத்தேச வயதுச்சான்றிதழ்.

- பாடசாலை விலகல் சான்றிதழ்
- ஞானஸ்தான சான்றிமழ்
- விண்ணப்பதாரியின் பிறந்த தினத்தைக் குறிப்பிடுகின்ற பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் புகைப்படப் பிரதி
- பிறப்புச் சான்றிதழின் கிடைத்த ஒரு பகுதி
- இலங்கைப் பிரஜாவுரிமைச் சான்றிதழ் (பிறந்த தினம் குறிப்பிட்டிருக்க வேண்டும்)
- தோட்டத்தினை விட்டுச் சென்றமைக்கான சான்றிதழ் (பிறந்ததினம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடவுச்சீட்டில் உரிய பக்கத்தினை உறுதிப்படுத்திய பிரதி
- தோட்ட அதிகாரி மூலம் வழங்கப்பட்ட பதிவு அட்டை
- ஜாதக குறியீடு

1.2 பௌத்த பிக்குமார்களாயின் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பெற்ற சாமனேரு சான்றிதழ் அல்லது உப சம்பத்தா சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். (ஏனைய குருமார்கள் தாம் குருமார் என்பதனைஉறுதி செய்யும் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும்)

1.3 விண்ணப்பதாரி திருமணமான பெண்ணாயின் தனது கணவரின் பெயரினைப் பெறவேண்டுமாயின் விவாகச்சான்றிதழின் மூலப்பிரதியினையும் புகைப்படப் பிரதியையும் இணைத்தல் வேண்டும்.

1.4 வெளிநாட்டில் பிறந்தவராயின் இலங்கை பிரஜாவுரிமையைப் பெற குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடமிருந்து பெற்ற சான்றிதழும் (C I T) அதன் பிரதியும்.

1.5 13/8 ** 7/8 அளவுள்ள வர்ணப்புகைப்படங்கள்.

1.6 முத்திரைக் கட்டணம்
- பதினேழு வயதிற்கு குறைந்த விண்ணப்பதாரியாயின் ரூபா 3.00 பெறுமதியான முத்திரையும்
- 17 வயதுக்கு மேற்பட்டவராயின் ரூபா. 13.00 பெறுமதியான முத்திரையும்

1.7 தமது நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப் படவேண்டிய ஆவணங்கள் கிராம உத்தியோகத்தர் மூலம் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ் இச் சான்றிதழ்கள் இல்லாதவிடத்து மட்டும் விண்ணப்பதாரியின் பெயர் குறிப்பிடப்பட்ட கீழ்வரும் இன்றேனும் முடிந்தளவு சமர்ப்பிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாக்காளர் பெயர்ப் பட்டியலில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
- வங்கிக் கணக்கின் மாதாந்த அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
- தொலைபேசி கட்டண பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்டபிரதி
- காணி அல்லது வீட்டின் உரிமை தொடர்பான உறுதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
- வாடகை அல்லது காணி குத்தகை வீடாயின் அதற்குரிய ஒப்பந்தம்
- வரிப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டு
- தற்காலிக வதிவாள் தொடர்பாக பொலிஸில் அறிவித்த கடிதத்தின் பிரதி 1.8 தனது தொழிலை அடையாள அட்டையில் குறிப்பிட வேண்டுமாயின் அதற்குரிய சேவைச் சான்றிதழ்

**02. பழுதடைந்த அடையாள அட்டைக்கான பிரதி அடையாள அட்டை பெறுதலும், அடையாள அட்டையில் உள்ள விபரத்தை திருத்தம் செய்தலும்**

திணைக்களத்தின் மூலம்வழங்கப்பட்ட அடையாள அட்டையை விண்ணப்பதாரியின் வேண்டுகோளுக்கேற்ப கீழ்வரும் காரணங்களுக்காக திருத்தம் செய்து கொடுக்கப்படும்.

1. முதற் தடவை பெற்ற தேசிய அடையாள அட்டையிலுள்ள புகைப்படத்தைக் காட்டிலும் தற்போது ஆளின் உருவம் வேறுபட்டிருத்தல்
2. பெயரை மாற்றிக் கொள்வதற்கான தேவை ஏற்படல்
3. வதிவடம் மாறியதால் விலாசம் மாறுபடல்
4. தொழில் வேறுபட்டிருப்பின் அல்லது தற்போதுள்ள பதவி வேறுபட்டி ருப்பின் அதனை அடையாள அட்டையில் சேர்த்துக் கொள்ளல்
5. முதல் அடையாள அட்டையில் பின்பக்கத்திலுள்ள விபரங்கள் தெளிவற்றுப்போதல்
6. பல்வேறு காரணங்களால் அடையாள அட்டை சேதமடைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. 1972ம் 1973ம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளுக்காக புதிய அட்டை பெறல் (1990 நவம்பர் மாதம் 20ம் திகதி 673/6 இலக்க விஷேட வர்த்தகமானி மூலம் இந்த வருடங்களில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

தேசிய அடையாள அட்டை திருத்தம் செய்துகொள்ள ஆ.ப.தி.வி.08 விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். (இளஞ்சிவப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறத்தால் அச்சிடப்பட்ட விண்ணப்பம்) இதனோடு கீழ்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2.1 தற்போது பாவிக்கின்ற அடையாள அட்டை

2.2 13/8**7/8 அளவான வர்ணப் புகைப்படம்

2.3 15 ரூபா பெறுமதியான முத்திரை

2.4 தனது தொழிலை அடையாள அட்டையில் குறிப்பிட வேண்டுமாயின் அதற்குரிய சேவைச்சான்றிதழ் (03 மாதகாலத்தினைக் கொண்டதாக இருத்தல்வேண்டும்.)

2.5 தற்போது பாவிக்கின்ற தேசிய அடையாள அட்டையின் இலக்கம் தெளிவற்றதாயின் அந்த இலக்கம் பாவித்தமை தொடர்பாக உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் (சாரதி அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு)

2.6 தற்போது பாவிக்கின்ற தேசிய அடையாள அட்டையின் பெயர், பிறந்த தினம் மற்றும் பிற விபரங்கள் வேறுபடல் அல்லது பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியை அல்லது 1.2 பந்தியில் குறிப்பிட்ட மாற்று ஆவணங்களை மூலப்பிரதிகளுடன் சமர்ப்பிக்கவும்.

2.7 பௌத்த பிக்குமார்களின் பெயர்களாயின் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் பெற்ற சாம நேர சான்றிதழ் அல்லது உபசம்பதா சான்றிதழ் ஏனைய மதகுருமார் தாம் குருமார் என்பதை உறுதி செய்யும் சான்றிதழ்களை சமர்ப்பிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.8 துறவறத்திலிருந்து சாதாரண வாழ்விற்கு திரும்பியவராயின் பௌத்த சமய அலுவல்கள் திணைக்கத்தில் இருந்து பெற்ற சாதாரண வாழ்விற்கு திரும்பிய சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

2.9 வேறு பெயர்களை தமது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிட வேண்டுமாயின், சமாதான நீதிவானிடமிருந்து பெற்றுக்கொண்ட சத்தியக் கடதாசி, தாம் குறிப்பிட்ட விரும்பும் வேறு பெயர்கள் பாவிக்கின்றமைக்கான எழுத்து மூல சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

## 03. காணாமல்போன தேசிய அடையாள அட்டைக்கான இணைப்பிரதியைப் பெறல்

தேசிய அடையாள அட்டை காணாமல் போன அதற்கான இணைப்பிரதி பெற ஆ.ப.தி.வி.07 என்ற விண்ணப்பப் படிவத்தை பயன்படுத்த வேண்டும். (பச்சை நிறமோ அல்லது பச்சை நிற எழுத்துக்களால் அச்சிடப்பட்ட விண்ணப்பம்) அத்தோடு கீழ் வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

3.1 தேசிய அடையாள அட்டை காணாமல் போன பொலிஸில் செய்யப்புட்ட முறைப்பாட்டின் மூலப்பிரதி (ஆறுமாதங்ளுக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

3.2 13/8**7/8 அளவான வர்ணப் புகைப்படம் ஐந்து

3.3 15 ரூபா பெறுமதியான முத்திரை

3.4 பிறப்புச் சான்றிதழ் அல்லது ஏலவே 12இல் குறிப்பிடப்பட்ட மாற்று ஆவணங்கள்.

3.5 தனது தொழிலை அடையாள அட்டையில் குறிப்பிட வேண்டுமாயின் அதற்குரிய சேவைச்சான்றிதழ் (03 மாதத்தினைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். வாண்மைத் தொழில்புரிவோர் தமது தொழிலை உறுதி செய்வதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். உதாரணமாக வைத்தியர், கணக்காளர், சட்டத்தரணி, பொறியியலாளர் போன்றோர் தமது வாண்மைத் தொழில் புரிவோர் பட்டப்படிப்புச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.6 காணாமல்போன அடையாள அட்டை இலக்கம் பாவித்தமைக்கான உறுதிப்படுத்தும் ஆவணங்கள். உதாரணமாக வங்கிப் புத்தகம், கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற ஆவணங்கள்.

3.7 கிராம உத்தியோகத்தர் மூலம் பெறப்பட்ட பதிவுச் சான்றிதழ்

3.8 துறவறத்திலிருந்து சாதாரண வாழ்விற்கு திரும்பியவராயின் பௌத்த சமய அலுவல்கள் திணைக்களத்தில் இருந்து பெற்ற சாதாரண வாழ்விற்குத் திரும்பிய சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

காணாமல் போன அடையாள அட்டைக்காக இணைப்பிரதி பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் போது பழைய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டிருந்த விபரங்களே குறிப்பிடப்பட வேண்டும். (ஏலவே இருந்த அடையாள அட்டை பெறுவதில் மதகுருமாருக்கு இதில் விதிவிலக்குண்டு.

**கவனிக்க வேண்டியது**

உங்களுக்கு கிடைக்கும் தேசிய அடையாள அட்டையை உடன் சரிபார்த்துக்கொள்ளுங்கள். எதேனும் வித்தியாசம் இருப்பின், அதனைக் குறிப்பிட்டு கிடைக்கப் பெற்ற அடையாள அட்டையுடன் கடிதத்தை எமது திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவும். பிழையை சரி செய்யவேண்டுமாயின் இரு மாத காலத்திற்குள் அடையாள அட்டை அனுப்ப வேண்டும். அடையாள அட்டை கிடைத்து இரண்டு மாதத்திற்கு மேற்படின் அதிலுள்ள பிழையைத் திருத்த திருத்தம் செய்வதற்கான விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒரு நபரிடம் ஒரு அடையாள அட்டை மட்டுமே இருக்க வேண்டும். ஒன்றிற்கு மேல் வைத்திருப்பது பாவிப்பது அல்லது பெற்றுக்கொள்ள முயற்சிப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் சேவை

நடமாடும் சேவைகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், நலன்புரிச்சங்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றில் எமது திணைக்களத்தால் நடாத்தப்படும் தமது தேவையை ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கவும். தேவையின் முக்கியத்துவத்திற்கு அமைய நடமாடும் சேவை நடாத்தப்படும்.

### நடமாடும் சேவை மூலம் கிடைக்கும் நன்மைகள்

- ஒரே இடத்தில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு தேவையான அனைத்து சேவைகளும் வழங்கல்
- ஏதேனும் பிரச்சினைகள் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு திணைக்கள ஊழியர்கள் மூலம் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்
- ஏதேனும் தாமதம் இருப்பின் அதற்குத் தீர்வு காணப்படும்
- மக்களையும் கிராம உத்தியோகத்தரையும் அறிவூட்டல்

நடமாடும் சேவையில் பங்குகொள்ளும் உத்தியோகத்தர்கள்

- பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
- அப்பிரதேச கிராமசேவை உத்தியோகத்தர்
- பொலிஸ் உத்தியோகத்தர்கள் (ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் 07ஆம் விண்ணப்பத்திற்கான பொலிஸ் அறிக்கை பெறுவதற்காக)
- சமாதான நீதவான்
- மேலதிக பதிவாளர் (பிறப்புச் சான்றிதழ் பிரச்சினை தொடர்பாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் பெற்ற கல்விச் சான்றிதழ்களை இலங்கையின் சமவலு கல்விச் சான்றிதழ்களாக மாற்றுதல்

மாற்றக்கூடிய கல்விச் சான்றிதழ்கள்

தரம் -10

தரம் - 12

- மதிப்பெண் சான்றிதழ் அறிக்கை
- விண்ணப்பதாரியின் கோரிக்கைக் கடிதம்
- மூலப்பிரதி சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணியால் உண்மைப்பிரதி என உறுதிப்படுத்தப்பட வேண்டும். மூலப்பிரதியும் உறுதிப்படுத்தப்பட்ட இணைப்பிரதியும் இணைக்கப்பட வேண்டும்.

குறிப்பு - தரம் 10, தரம் 12 சான்றிதழுக்கு விண்ணப்பதாரி நேரடியாக சமூகமளிக்க வேண்டும் அல்லது மூலப்பிரதி தபாலில் அனுப்பப்படவேண்டும்

தொடர்புகளுக்கு

தரம் - 10, தரம் - 12

பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல, கொழும்பு

தொ.பேசி 011 - 2786200

**பட்டப்படிப்பு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, 20 வாட் பிளேஸ், கொழும்பு 7, தொ.பேசி 011 - 2695301, 011-2695302

காணி உரித்து

1. ஆட்சியுரிமை (precription)
2. கொள்வனவு (Purchase)
3. வழியுரித்து (Inheritance)
4. நன்கொடை (Donation)
5. அரச கொடைகள் (Crown Grants)

**ஆட்சியுரிமை**

ஒருவர் தொடர்ச்சியாக 10 வருடங்கள் எந்தவித தலையீடோ முறிவோ இன்றி காணி உரிமையாளரின் உரித்துக்கெதிராக உடமை கொண்டிருந்தால் ஆட்சியின் மூலம் உரிமை கொண்டாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். ஆனால் பராய வயதை அடையாத ஒருவரின் சொத்தைப் பொறுத்த வரையிலும் வெளிநாட்டில் வசிக்கும் ஒருவரின் சொத்தைப் பொறுத்த வரையிலும் 30 வருடங்கள் எந்தவித தலையீடோ முறிவோ இன்றிக் காணி உரிமையாளரின் உரித்துக்கெதிராக உடமைகொண்டிருந்தால் வேண்டும்.

மேலும் அரச காணிகளுக்கெதிராகவும், நம்பிக்கைப் பொறுப்புக்குட்பட்ட சொத்துக்களுக்கெதிராகவும், கோவில் சொத்துக்களுக்கெதிராகவும் ஆட்சியுரிமை கோர முடியாது.

**கொள்வனவு**

பணம் கொடுத்து வாங்குவது

**வழியுரித்து**

ஒருவரின் முன்னோர்கள், சகோதரர்கள், பிள்ளைகள் அல்லது உறவினர்கள் மரணமடைவதால் வந்தடைவது. இது முதுசொம், உரிமை போன்ற பெயர்களால் அழைக்கப்படும்.

**நன்கொடை**

ஒருவர் இன்னொருவர்மீது கொண்டுள்ள அன்பு பட்சம் காரணமாக வழங்குவது.

**அரச கொடைகள்**

அரச காணிகள் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அனுமதிச்சீட்டு (Permit) மூலமாகவும் அளிப்பொன்றின் (Grant) மூலமாகவும் வழங்கப்படுகிறது.

**அனுமதிப் பத்திரங்கள் மூலம்:-**

அரச காணிகள் தொடர்பான சட்டங்களில் குறிப்பிடப்பட்டவாறாக அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. அவையாவன குறைந்த வருமானம் சம்பாதிப்பவர்கள் மற்றும் காணி இல்லாதவர்கள், அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் அந்தக் காணியில் வாழக்கூடியதாக இருப்பதுடன் அக்காணியில் பயிர் செய்வதுடன் குறித்துரைக்கப்பட்ட அளவுகோள்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்திப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் அரசுக்கு ஒரு குறைந்தபட்ச மாதாந்த வாடகையை செலுத்தும்படி தேவைப்படுகின்றது. இவ்வனுமதிப பத்திரங்களானவை வருடாந்த அனுமதிப் பத்திரங்களாகவோ அல்லது...... அனுமதிப் பத்திரம் என அறியப் படுபவையாக ஒரு விசேட சட்டத்தின்கீழ் விநியோகிக்கப் பட்டதாவோ இருக்கலாம்.

**மானியங்கள் ஊடாக:-**

(சுவர்ணபூமி, ஜயபூமி, ரணபூமி, ரணபிம) அனுமதிப் பத்திரங்களைக் கொண்டிருப்பவர்கள் தமது அனுமதிப்பத்திரங்களை ஒரு மானியமாகவோ அல்லது உறுதியாகவோ பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து மாற்றிக்கொள்ளக்கூடியவர்களாக உள்ளனர்.

அரசாங்க அதிபருக்கு திருப்தியளிக்கக்கூடிய வகையில் காணி விருத்தி செய்யப்பட்டிருக்கின்றது.

வீடு மலசலகூடம் மற்றும் வேலிகள் அந்தக் காணியில் பராமரிக்கப்படுகின்றது.

அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட தொகையானது பிரதேச செயலாளருக்கு வருடாந்தம் செலுத்தப்பட்டிருக்கிறது.

காணியானது விவசாய நோக்கங்களுக்கானதாக இருந்தால் அக்காணியானது துப்பரவு செய்யப்பட்டு அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறாக பயிர் செய்யப்படுகிறது.

காணியானது விவசாய நோக்கங்களுக்கானதாக இருந்தால் அக்காணியில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

காணியானது வீடுகட்டுதல் நோக்கத்திற்கானதாக இருந்தால் ஆகக்குறைந்தது ஒரு வருடம் அக்காணியில் அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

மண் பாதுகாப்பு முறைகள் கைக்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர் ஒரு இலங்கைப் பிரஜையாக உள்ளார்.

அரச காணியை ஜனாதிபதியானவர் மானியம் அல்லது குத்தகையாக குறைந்த கட்டணத்திலோ அல்லது வாடகையிலோ வறுமை, சமய, கல்வி, சமய, விஞ்ஞான அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக வழங்கலாம்.

**அரச காணி தொடர்பான வரையறைகள்**

அரச காணிக்கு எதிராக யாரும் குறித்துரைத்து உரிமை கோர முடியாது அனுமதிப்பத்திரம் மீதோ அல்லது மானியம்மீதோ வழங்கப்பட்ட காணியின் மீது அத்துமீறுவது ஒரு தண்டணைக்குரிய குற்றமாகும்.

எனவே ஒரு தனி நபருக்குச் சொந்தமான காணிக்கு அரசானது ஒரு அனுமதிப்பத்திரத்தையோ மானியத்தையோ வழங்கினால் அந்த நபர் அரசுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும்.

ஒரு அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் தனது காணியை விற்கமுடியாது. அவர்கள் சட்டத்தின் பிரகாரம் அதனை மாற்றிக கொள்ள மாத்திரமே முடியும்.

ஒரு அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அல்லது மானியம் வைத்திருப்பர் பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான அங்கீகாரமின்றி அவற்றை மாற்றிக்கொள்ள முடியும்.

பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தோடு மாற்றும் சந்தர்ப்பங்களில் கூட முதல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்மீது விதிக்கப பட்டுள்ள நிபந்தனைகளும் வரையறைகளும் தொடர்ந்து பிரயோகிக்கப்படும்.

ஒவ்வொரு அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அல்லது மானியம் வைத்திருப்பவர் தலைப்புக்கு பின்வருபவராக இருவரை நியமிக்க முடியும். அவ்வாறான நியமனம் ஒன்று இல்லையெனில் அவ்வனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட உரிய சட்டத்தின் கீழ் அதன் பிரகாரம் அம்மானியம் பரிமாணம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணி உறுதி

தனியார் காணிகளைப் பொறுத்தவரை உறுதி நிறைவேற்றுவதன் மூலம் உரித்து மாற்றம் செய்யப்படுகின்றது. மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளக்கமைவாகவும் உறுதிகள் நிறைவேற்றப்படுகின்றன.

மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அசையா ஆதனம் ஒன்றைப் பிணிக்கும் ஆவணம் எதுவும் நொத்தாரிஸ முகதாவிலும் ஆகக் குறைந்தது 2 சாட்சிகள் முன்னிலையிலும் நிறைவேற்றப்பட வேண்டும்.

தற்போதைய உறுதிகள் ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பதியப்படுகின்றன. உரித்துப் பதிவு செய்யப்படுவதில்லை.

### உரித்துப் பதிவு

1998ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உரித்துப் பதிவுச் சட்டத்தின்கீழ் காணிகளின் உரித்துக்களைப் பதிவுசெய்யும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் தற்பொழுது நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் நாடு முழுவதுமுள்ள காணிகள் அளப்பனவு செய்யப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் அரச உத்தரவாதத்துடன் கூடிய காணியின் உரித்துப் பதிவுசெய்யப்படவுள்ளது.

### அரசு தனியார் காணிகளை சுவீகரிக்க முடியுமா?

ஆம், சட்டத்தின் பிரகாரம் ஒரு பொது நோக்கத்திற்காக தனியார் காணிகளை அரசு சுவீகரிக்க முடியும். (காணி சுவீகரிப்புச் சட்டம்)

### அரசால் காணிகள் எவ்வாறு சுவீகரிக்கப்படுகின்றன

பொது நோக்கங்களுக்காக காணி தேவைப்படும்பொழுது சட்டத்தால் நிறுவப்பட்டுள்ள அளவுகோல்களின் பிரகாரம் அமைச்சர் பிரகடனத்தை செய்கிறார். பிரகடனமானது வர்த்தமானியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரிக்கப்படுகிறது. பின்பு காணி நில அளவைத் திணைக்களத்தால் நிலம் அளவை செய்யப்படுகின்றது. 500.00 ரூபாவிற்கு மேலதிகமான பெறுமதியைக் காணி கொண்டிருப்பின் புதினப் பத்திரிகைகளில் பிரசுரித்தும், காணியிலும் அறிவிப்பு போடப்படுகிறது. காணியை உரிமை கோரக்கூடியவர்கள் அவ்வேளையில் சுவீகரிக்கும் அதிகாரி முன் சென்று நட்டஈட்டை மதிப்பீடு செய்து கொள்ளலாம்.

**தனியார் காணியை அரசு சுவீகரித்துக் கொண்டால் நட்டஈடு வழங்கப்படுகிறதா?**

ஆம், இந்த விசாரணையைத் தொடர்ந்து சுவீகரிப்பு அதிகாரி நட்ட ஈட்டை மதிப்பீடு செய்வார். காணியின் சந்தைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு நட்டஈடு மதிப்பீடு செய்யப்படும். உரிமை கோருபவர் சுவீகரிப்பு அதிகாரியின் தீர்மானத்தில் திருப்தியடையாது போனால் அவ்வழக்கில் அறிவித்ததில் இருந்து 21 நாட்களுக்குள் பரிசோதனைக்குழு ஒன்றிற்கு மனுச்செய்யலாம். மாவட்ட நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் என்பனவற்றுக்கும் ஒரு மேல் முறையீடு செய்யப்படலாம்.

**காணி உறுதி தேடுதல் செய்தல்**

காணி தொடர்பான ஏடுகளை தேடுதல் செய்ய அனுமதி உடையவர்கள்

1. காணியின் உரிமையாளர்
2. உரிமையாளரால் அதிகாரம் அளிக்கப்பட்டவர்
3. அற்றோத் தத்துவக்காரர்
4. சட்டத்தரணி
5. பிரசித்த நொத்தாரிசு

உறுதி தேடுதல் செய்வதற்குரிய படிவங்களை காணிப் பதிவகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த படிவத்தை காணிப் பதிவகத்தில் ஒப்படைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டணம்

உறுதிகளின் இணைப்பிரதியை தேடுதல் செய்வதற்கான கட்டம் ரூபா 500 (ஒரு நொத்தாரிசுக்கு) அத்தாட்சிப் படுத்திய பிரதியைப் பெற ரூபா 500 காசாக செலுத்தப்படல் வேண்டும்.

காணி ஒன்றின் பதிவை தேடுதல் செய்ய (காணி ஒன்றுக்கு) ரூபா 500, பரதி ஒன்றை பெற ஒரு பக்கத்திற்கு ரூபா 100 காசாக செலுத்தப்படல் வேண்டும்.

## காணி உறுதிகளைப் பதிவு செய்தல்

1. காணியின் உரிமையாளர்
2. பிரசித்த நொத்தாரிசு

காணி சம்பந்தமான உறுதி அக்காணி அமைந்துள்ள மாவட்டத்தின் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

## முத்திரைக் கட்டணம்

சமா்ப்பிக்கப்படும் உறுதிகள் அவற்றின் வகைகளுக்கு ஏற்ப முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டும். முத்திரைத்தீர்வை இணைப்பிரதிகளில் ஒட்டப்படும். முத்திரை மூலம் அல்லது காணி அமைந்துள்ள மாகாண சபைக்கு செலுத்துவதன் மூலம் செலுத்தப்படலாம்.

குறிப்பு:-

வடமாகாணத்தைப் பொறுத்தவரை மாகாண சபை இயங்காத காரணத்தினால் மத்திய அரசாங்கத்தினால் வெளியிடப்படும் வருமான முத்திரைகளை ஒட்டுவதன் மூலம் அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கணக்கில் வைப்பிடுவதன் மூலம் முத்திரை தீர்வை செலுத்தப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

1. இலங்கையில் அஞ்சல் சேவை அறிமுகமான ஆண்டு- 1832
2. இலங்கையில் உபதபால் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்:டு - 1921
3. இலங்கையில் பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு- 1866
4. உலகவர்த்தக சம்மேளத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் - ஜெனீவா
5. சூரியனிலிருந்து 6 இலட்சத்து 80ஆயிரம் மைல் தூரத்திலுள்ள Comet ஐ சோன் எனும் வால்நட்சத்திரம் கடந்த நவம்பர் 28 சூரியனை கடந்து சென்றது இது தனது பயணத்தை 10000 புவியாண்டுகளுக்கு முன் ஆரம்பித்தது.
6. நெல்சன் மண்டேலா சர்வதேச தினம் யூலை 18 இத்தினம் நெல்சன் மண்டேலாவின் பிறந்ததினமாகும் 18.07.2009 ஐக்கியநாடுகள் சபையால் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.
7. இலங்கையில் இலவச சீருடை விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு- 1993
8. இலங்கையில் பாடசாலைக்கல்வி அமைச்சு உருவாக்கப்பட்ட ஆண்டு-2001
9. மனித உட்லிலுள்ள நீரின் அளவு-2/3 பங்கு
10. கண்ணில்லாத உயிரினம் - மண்புழு
11. மிகச்சிறிய இதயம் கொண்ட உயிரினம் - சிங்கம்
12. GCE A/L பாடங்கள் நான்கிலிருந்து மூன்றாக போட்டி வைப்பது அறிமுகமான ஆண்டு -1998
13. பல்கலைக்கழக அனுமதிக்கு பொதுஅறிவுப்போட்டி வைப்பது அறிமுகமான ஆண்டு-2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. உலகசுகாதார நிறுவனம் ஆரம்பமான ஆண்டு-1948 அதன் தலைமையகம் ஜெனீவாவில் (சுவிஸ்லாந்து) அமைந்துள்ளது.
இதன் நோக்கம் - உலக சுகாதார மேம்பாடு நடவடிக்கைக்குப் பொறுப்பு
15. சர்வதேச சனத்தொகை தினம் - யூலை 11
07. 2013 வரையான உலக சனத்தொகை -7,097,100,000
16. உலகின் முதல் முதலில் தமிழில் வெளியான 3D திரைப்படம்-மை டியர் குட்டிச்சாத்தான்
17. வறுமையான,திறமையான மாணவர் நலன் கருதிப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் இலங்கையில் அறிமுகமான ஆண்டு - 1952
18. Computer mouse ஐக் கண்டு பிடித்தவர் -டக்ளஸ் ஏங்கல் இவர் ஒரு அமெரிக்கராவார்.இவர் 04.07.2013 தனது 88வது வயதில் இறந்தார்
19. இலங்கை தொலைத்தொடர்பு தினைக்களம் ஆரம்பமான ஆண்டு-1982
20. Srilanka Telecom Limited ஆரம்பமான ஆண்டு-1997
21. இலவசகல்வியை முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு-நெதர்லாந்து
22. உலகில் பரீட்சையை அறிமுகம் செய்த நாடு-சீனா
23. சர்வதேச இடதுகையாளர் தினம்- August 13
1976 இலிருந்து இத்தினம் அனுஷ்டிக்கப் படுகின்றது.உலகில் 7%-10% வரையானோர் இடதுகையாளர் ஆவர்.
24. உலக இளைஞர் தினம்-August 12
17.12.1999 ஐக்கிய நாடுகள் சபையில் பிரகடனப்படுத்தப்பட்டது
நோக்கம்-இளைஞர் குடிவரவு நடமாடும் அபிவிருத்தியை முன்னோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 .உலக நுளம்புகள் தினம் - August 20
26. உலக மனிதாபிமான தினம் - August 19
27 .உலக புகைப்பட தினம் - August 19
28 .[NSB] தேசிய சேமிப்பு வங்கி ஆரம்பமான ஆண்டு - 1832
29 .உள்நாட்டு இறைவரிச்சட்டம் அறிமுகமான ஆண்டு - 1979 திருத்தங்கள் ஏற்பத்தப்பட்ட ஆண்டு - 2000, 2002
30. உலகில் பிறந்த பரிசோதனைக்குழாய் குழந்தை -லூசி பிறவுண் (England)
31. சிறுவர் உதவிச் சேவைக்குரிய தொலைபேசி இலக்கம் - 1929
32. லஞ்சம் ஊழல் தொடர்பான தொலைபேசி இலக்கம் - 1954
33. தேசிய உதவிச்சேவைக்குரிய தொலைபேசி இலக்கம் - 118
34. அரச பொலிஸ் சேவைக்குரிய தொலைபேசி இலக்கம் - 119
35 .உலக அகதிகள் / ஏதிலிகள் தினம்- June 20 2000ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப் படுத்தப்பட்டது. 2011ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி உலகில் 15200000 அகதிகள் உலகிலுள்ளனர்
36. கைரேகையை வைத்து குற்றவாளிகளைக்கண்டறியும் முறையைக் கண்டறிந்தவர் -எவரிற் ஹென்றி
37. டெஸ்ட் விளையாடும் நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் அணைந்து விளையாடுவது மேற்கிந்திய தீவுகள் ஆகும்
38. இலங்கைப்பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட முதல் பெண்மணி-புளோரேன்ஸ் சேனநாயக்க
39. தமிழ் சிற்றிலக்கியங்கள் - 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. தேசவழமைச்சட்டம் எழுத்து மூலமாக்கப்பட்ட ஆண்டு-1707
41. சூரியனில் அதிகமாகக் காணப்படும் வாயு-ஐதரசன்
42. சார்க் அமைப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு - 1985
43. கனகம் என்ற சொல் குறிப்பது -பொன்
44. சர்வதேச எழுத்தறிவு தினம் -September 08
45. 1 நாள் கிரிக்கற்போட்டி அறிமுகமான ஆண்டு - 1963
46 கிரிக்கற்றின் தாயகம் - இங்கிலாந்து
47 .இலங்கையின் முதலாவது ஆங்கிலத்திரைப்படம்-Bridge on the rivequai
48. உலகில் அதிகமாக சினிமா தயாரிக்கும் நாடு - இந்தியா
49 .மனித உடலில் மிகவும் வன்மையான பகுதி -பல்
50. சர்வதேச சிறைக்கைதிகள் தினம்-September 13
51. உலக தற்கொலை தடுப்பு தினம்-September 10
52 .துவிச்சக்கரவண்டியைக் கண்டுபிடித்தவர் - ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த K.மக்மிலன் (1839)
53 .நைல் நதியின் நீளம் - 6650Km
54. உலக விலங்குகள் தினம் - October 4
இத்தாலியில் புளோரன்ஸ் நகரில் 1931இலிருந்து ஆரம்பம்
55. முதன்முதலில் அகராதியைத் தொகுத்தவர்கள்
ஆங்கிலம் - சாமுவேல. ஜோன்சன்
தமிழ்-கதிரவேற்பிள்ளை
சிங்களம் -ஷோரத தேரா
56. மது ஒழிப்புத்தினம் - October 3
57. உலக சிறுவர்,முதியோர் தினம்-October 1
58 உலக ஆசிரியர் தினம் - October 5
இலங்கையில் ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கும் நாள் - October 6 யுனெஸ்கோ நிறுவனம் இதனை அறிமுகப்படுத்தியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. உலக கைகழுவுதல் தினம்-October 15
உலக வெள்ளைப்பிரம்பு தினம்-October 15
கிராம பெண்கள் தினம்-October 15
60. உலக தரநிர்ணய தினம் -October 14
(World Standards day )
1948 இலிருந்து இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது

தொகுப்பு - ர.அபிராம்

# பழமொழிகள்

- வரவுக்கு தக்க செலவு செய்
  Cut your coat according to your clothe
- திறமையான தொடக்கம் பாதி வெற்றி
  Well begun is half done
- புற அழகு அழகல்ல , அக அழகே அழகு
  Beauty is faint but skin deep
- ஆறிலும் சாவு நூறிலும் சாவு
  Earth keeps no calander
- நிதானம் பிரதானம்
  Slow and steady win the race
- குறைகுடம் தளும்பும்
  Empty Vessel Make More sound
- ஆசை வெட்கமறியாது
  Love is Blind
- செய்யும் தொழிலே தெய்வம்
  Work is fortune



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
  Many hands make work light
- மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே
  Trust not broken staff,
- நெருப்பின்றி புகையாது
  There is no smoke without fire
- இருப்பதை விட்டு இல்லாததற்கு அலையாதே
  Waste not want not
- குருடனுக்கு குருடன் வழி காட்ட முடியுமா?
  The blind canot lead the blind
- யானைக்கு ஒரு காலம்,பூனைக்கு ஒரு காலம்
  A cat may look at king
- இளம் கன்று பயமறியாது
  A young calf knows no fear
- காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
  Strike the iron while it is hot
- சிறிய பானை சீக்கிரம் சூடாகும்
  A little pot become hot soon
- அன்பான நண்பனை ஆபத்தில் அறி
  A friend in need is a friend in deed
- முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்
  Perseverance wins the game
- பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்
  The old fox is caught at last
- எத்தனை நாள் வாழ்ந்தான் என்பதை விட எப்படி வாழ்ந்தான் என்பது மேல்
  We live in deeds,not in years



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உழைப்பின்றி ஊதியம் இல்லை
  No pain,no gains
- கூழுக்கும் ஆசை ,மீசைக்கும் ஆசை
  you cannot cut the cake and have it
- நெருப்பின்றி புகையாது
  No smoke without fire
- புது துடைப்பம் நன்றாக கூட்டும்
  New brooms sweep well
- முள்ளை முள்ளால் எடு
  Find theif to catch therif
- மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி
  Silence is half committed
- அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி
  As is the king so one subjects
- அனைவருக்கும் நண்பனாக இரு ஆனால் நெருங்கிப்பழகாதே
  Be friendly but not familier
- உருவத்தை கண்டு ஏமாறதே
  Appearence is deceitful
- தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்
  As you sow so you reap
- கொல்லன் தெருவில் ஊசி விற்காதே
  Carry not coal to new castle
- ஆனைக்கும் அடி சறுக்கும்
  Good hammer sometimes rots



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
  Guilty consence priks the mind
- நிழலின் அருமை வெயிலில் தெரியும்
  Blessings are not valued till they are gone
- அரைகுறை படிப்பு ஆபத்தானது
  Half booked knowleged is highly dangerous
- அடி நாக்கில் நஞ்சு ,நுனி நாக்கில் தேன்
  A honey tongue and a heart of gall
- ஆபத்திற்கு பாவமில்லை
  Necessity has no law
- ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்
  One lie makes many lies
- துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்
  Too much rest is rust
- தான் ஆடவிட்டாலும் தன் தசை ஆடும்
  Blood is thicker than water
- நல்லார் பொல்லாதாரை நட்டாற்றில் அறியலாம்
  A tree is known by its friuit
- யாருக்கும் நம்பிக்கை துரோகம் செய்யாதே
  Dont be treacherous to any one
- முயற்சி திருவினையாக்கும்
  Effort is the mother of good fortune
- சொல்வதை விட செய்வதே மேல்
  Example is better than precept
- கைக்கு தக்கபடி காலை நீட்டு
  Desire according to your limitations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவ வாழ்வினில்

## மகிழ்ந்து



தந்தை
பரராஜசிங்கம்
18.12.1928 - 28.04.1983



அன்னை
தனலெட்சுமி
06.08.1937 - 12.05.2012



## அமரர்.மனோகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## அமரர்.

## பரராஜசிங்கம் மனோகரன்

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து சகல காரியங்களையும் நிறைவாக செய்து எம் மனதை வென்ற துயர் கலைந்த அயலவர்களுக்கும், உறவினர்களுக்கும், இறுதி ஊர்வலத்திலும் ஏனைய காரியங்களிலும் கலந்த அன்பு நெஞ்சங்களுக்கும் இன்றைய நினைவு நாளில் கலந்து ஆத்மசாந்தி வேண்டி எம்மோடு கலந்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான அன்பு நிறைந்த நன்றிகள்.

– குடும்பத்தினர் –

**198/3 லோவர் வீதி**
**உவர்மலை,**
**திருக்கோணமலை**


- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : அஸ்ரா பிறின்டஸ், திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச

## அமரர். பரராஜசிங்க

### ● வம்சம் - தந்தைவழி

மாரிமுத்து + பொன்னம்மா
(அமரர்)

↓

பரராஜசிங்கம் (அமரர்)

பிரபா
+
திருநாவுக்கரசு
↓
பிரதீபா + தர்மசேகர்
சர்மிலா + பிரதீப்குமார்
↓
விஷ்ணவி
பிரதீசன்
பிரியந்தி + பாஸ்கரநாதன் → திருபரன்
பிருந்தா
சிவரூபன்

ரூபா
+
ஸ்ரீஸ்கந்தராஜா
↓
சாளினி
ராஜீவ்
ஸ்ரீசஞ்ஜீவ்
ஸ்ரீதாட்சாயினி

மோகன்
+
உமாஹரி
↓
பிரவீனா(அமரர்)
தனுபவன்

(அமரர்)
மனோகரன்

### ● வம்சம் - தாய்வழி

சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர்)

தனலெட்சுமி அ

குலஞானேஸ்வரி
+
சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற அதிபர்
↓
ஜனார்த்தனன்
(லண்டன்)
ஜசோதரா
ஜஜிதரா, ஜதுகுலன்

விஜயராணி
+
சிறிஸ்கந்தராஜா
↓
செந்தில்குமரன்
ஷாலினி
(லண்டன்)

கிருஸ்ணகுமார்
(வலய கல்விப்பணிப்பாளர்
தென்மாராட்சி சாவகச்சேரி
+
நிர்மல திலகேந்திரா
(அமரர்)
தணிகைக்குமரன்,
ஆரணி, சரவணபவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்சம்

## சிங்கம் மனோகரன்

சின்னத்துரை + வள்ளிநாயகம்
(அமரர்)

↓ தனலெட்சுமி (அமரர்)

↓ சுந்தரலிங்கம் + ஜெயலெட்சுமி

)
ன்

(அமரர்)
கிருபாகரன்

வரதன்
+
சுகிர்தா
↓
இளமாறன்
இசைவிழி

சாந்தி
+
வரதராஜன்
↓
டினோத்

கீதா (அமரர்)
+
ஜெகதீசன்
↓
ரம்மியன்
தர்ஷன்
விதுர்ஷிகா

**மயூரன், அபிராமி, மயூரி**

**சுமி அம்மா(அமரர்)**

ளர்
சேரி

ரா

ன்

சிவகுமார்
+
உமாசங்கரி
↓
பாலபிரசன்னா
பிரியதர்சினி + அச்சுதன் → அஞ்சனா
ஜனனி, சஜிகீர்த்தனா
(இந்தியா)

இந்திரா
(ஆசிரியை
தி/விபுலானந்தா கல்லூரி)

கருணாகரன்
(அமரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

on.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org